பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 12 2025 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- காசி தமிழ்ச் சங்கமம், உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் இன்று தொடங்குகிறது.
- நாடாளுமன்ற நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, இரண்டாவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.
- வெளிப்படையான வரி விதிப்பு முறையை ஏற்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- யுக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது.
- Bosphorus கோப்பை ஸ்கேட்டிங் போட்டியில், இந்தியாவின் தாரா பிரசாத் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>><<<<<<>>>>>><<<<

காசி தமிழ்ச் சங்கமம், உத்தரபிரதேசத்தின் வாரணாசியில் இன்று தொடங்குகிறது.

தொடர்ந்து நான்காவது ஆண்டாக நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியை தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் முன்னிலையில், உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் ஆகியோர் தொடங்கி வைக்கவுள்ளனர்.

“தமிழ் கற்கலாம்” என்ற மையக்கருத்துடன் வரும் 15ஆம் தேதிவரை இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழகத்திலிருந்து 7 பிரிவுகளில், ஆயிரத்து 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

இதற்காக வாரணாசி சென்ற அவர்களுக்கு, சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடக்க விழாவை ஒட்டி, இன்று மாலை நடைபெறவுள்ள வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளில் காசி மற்றும் தமிழகத்திலிருந்து கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

*இதுகுறித்து, மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில், காசி தமிழ்ச் சங்கமம் நடைபெறுவதாக தெரிவித்துள்ளார்.*

*தமிழகம் காசி இடையேயான கலாச்சார பிணைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டுள்ளார்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் இருவேறு திசைகளில், பண்டைய பாரத மக்களால் உருவாக்கப்பட்ட கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் சார்ந்த பிணைப்பை எடுத்துரைக்கும் வகையில் காசி தமிழ்ச் சங்கமம் நடைபெறுவதாக கூறியுள்ளார்.*

*இதன் வாயிலாக தேச ஒற்றுமையை பாதுகாப்போம் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*காசி தமிழ்ச் சங்கமத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தின் தென்காசியிலிருந்து அகஸ்தியர் வாகன பிரச்சாரப் பயணம் இன்று தொடங்கியுள்ளதாக சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் திரு. காமகோடி தெரிவித்துள்ளார்.*

*(சவுண்ட் பைட் – காமகோடி 44 செகண்ட்ஸ்)*

*காசி தமிழ்ச் சங்கமத்தின் நிறைவு விழா, ராமேஸ்வரத்தில் நடைபெறவுள்ளது.*

>>>><<<<<>>>>><<<<

*நாடாளுமன்ற நடவடிக்கைகள் இரண்டாவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.*

*மக்களவை இன்று காலை கூடியதும், ஜார்ஜியா நாட்டிலிருந்து வந்துள்ள நாடாளுமன்ற தூதுக் குழுவினரை அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வரவேற்றார்.*

*அதனைத் தொடர்ந்து, அவை நடவடிக்கைகள் தொடங்கிய போது, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, அவை முதலில் நண்பகல் 12 மணிவரையும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையும் ஒத்தி வைக்கப்பட்டது.*

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

இதனிடையே, மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த கல்வித்துறை இணையமைச்சர் திரு. சுகந்த மஜூந்தார், பொதுப்பட்டியலில் உள்ள கல்வியை மீண்டும் மாநில பட்டியலுக்கு மாற்றும் திட்டம் ஏதுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

கல்வியை பொதுப்பட்டியலுக்கு மாற்றியதன் மூலம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கல்வி வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

உயர் கல்வி நிறுவனங்களிடையே, ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும் வகையிலேயே தேசிய அளவிலான தர நிர்ணய நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாகவும் திரு. சுகந்த மஜூந்தார் தெரிவித்துள்ளார்.

>>>><<<<<>>>>><<<<

அஸ்ஸாம் மாநில உருவான தினத்தை ஒட்டி, அம்மாநில மக்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அஸ்ஸாமின் கலாச்சார சிறப்புகளை பேணி காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இந்த நாள், ஒற்றுமை உணர்வை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்றதிலிருந்து, அஸ்ஸாமின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<<>>>>><<<<

வெளிப்படையான வரி விதிப்பு முறையை ஏற்படுத்த மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று வரி தகவல் பரிமாற்றம் மற்றும் வெளிப்படைத் தன்மை குறித்த சர்வதேச அமைப்பின் 18வது கூட்டத்தில் பேசிய அவர், வரி விதிப்பில் இந்தியா, நேர்மையான

மற்றும் பொறுப்பான நடைமுறைகளுடன் கூடிய பொருளாதார நிர்வாகத்தை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

முறையான வரி விதிப்பு மேற்கொள்ளப்படாவிட்டால், அது, வருவாய் பற்றாக்குறையை ஏற்படுத்துவதுடன், நாட்டின் வளர்ச்சியிலும் இடைவெளியை ஏற்படுத்துவதாக அமையும் என்று அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய நிதி சூழல், கடந்த 20 ஆண்டுகளில் பெருமளவு மாற்றமடைந்திருப்பதை சுட்டிக்காட்டிய நிதியமைச்சர், சீரான நிதி நிர்வாகத்திற்கு வெளிப்படையான வரி விதிப்பு அவசியம் என்றும் தெரிவித்தார்.

>>>><<<<<>>>>><<<<

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, நாட்டில் கார் விற்பனை கடந்த நவம்பர் மாதம் 21 சதவீதம் அதிகரித்துள்ளது

மொத்தம் 4 லட்சத்து 25 ஆயிரம் கார்கள் விற்பனையாகியுள்ளதாக இந்திய வாகன உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<<>>>>><<<<

யுக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்களான Krasnoarmeysk மற்றும் Volchansk-ஐ கைப்பற்றியுள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது.

இப்பகுதிகள் ரஷ்யாவின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் நேற்று முன்தினம் இப்பகுதியை பார்வையிட்டதாகவும், அதிபரின் செய்தி தொடர்பாளர் திரு. Dmitry Peskov தெரிவித்துள்ளார்.

இதேபோன்று யுக்ரைனின் Dimitrov நகரின் ஒரு பகுதியும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அந்நாட்டு ராணுவ தளபதி Valery Gerasimov கூறியுள்ளார்.

>>>><<<<<>>>>><<<<

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று காலை காற்றழுத்த தாழ்வு மண்டலாக வலுவிழந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் – செந்தாமரை 45 செகண்ட்ஸ்)*

*>>>><<<<<>>>>><<<<*

*பீகார் சட்டப்பேரவை தலைவராக பிஜேபியைச் சேர்ந்த திரு. பிரேம்குமார் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*

*பேரவையின் இடைக்கால தலைவர் திரு. நரேந்திர நாராயன் யாதவ், பேரவையில் இன்று இதனை அறிவித்தார்.*

*>>>><<<<<>>>>><<<<*

*Bosphorus கோப்பை ஸ்கேட்டிங் போட்டியில், இந்தியாவின் தாரா பிரசாத் வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*துருக்கியில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>><<<<<>>>>><<<<*

*இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Snehit காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 11-9, 4-11, 4-11, 15-13 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் Fanbo Meng-யை வென்றார்.*

*>>>><<<<<>>>>><<<<*

*சையத் முஷ்தாக் அலி கோப்பைக்கான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், கர்நாடகாவுக்கு எதிரான ஆட்டத்தில், தமிழக அணி வெற்றி பெற 246 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற தமிழக அணி முதலில் பந்து வீச தீர்மானித்ததை அடுத்து பேட் செய்த கர்நாடகா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 245 ரன் எடுத்துள்ளது.*

*>>>><<<<<>>>>><<<<*